1973 ஆகஸ்டு 4]

ஆகும். இப்போது மனநோய் சிகிச்சை பிரிவு ஒன்றை மாவட்ட மருந்தகங்களில் தொடங்க உத்தேசிக்கப்பட்டு, சில இடங்களில் தொடங்கப்பட்டிருக்கிறது. மேலும் மனநோய் சிகிச்சையில் 'டிப்ளமோ' தகுதி பெற்றவர்கள் இருந்தால் மாவட்ட மருந்தகங்களில் எல்லாம் இந்தப் பிரிவை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, மனநோய் மருத்துவ மனைகளில் செவிலியர்கள் என்று சொல்லக்கூடிய பெண் நர்சுகளைப் போடுகின்ற காரணத்தினுல் சில நேரங்களில் அசம்பாவிதங்கள் ஏற்பட்டு விடுகின்றன. சென்ற ஆண்டுகூட அப்படி ஒரு அசம்பாவிதம் ஏற்பட்டுவிட்டது. ஒரு நோயாளி ஒரு நர்சை கட்டிப்பிடித்து, கடித்து விட்டான். ஆகவே அம்மாதிரியான இடங்களில் ஆண் நர்சுகளைப் போட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தனிப்பட்ட ஒரு நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு முடிவு செய்வது தவறு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரி மனநோய் பிடித்த நோயாளிதான் இந்தமாதிரி தவறு செய்தான் என்றல்ல ; மனநோய் இல்லாத மற்றவர்களும் இந்தமாதிரி செய்தார்கள் என்று நாம் கேள்விப்படுகிறோம் ; பத்திரிகையில் பார்க்கிறோம். மனநோயாளிகளுக்கு ஒரு ஆறுதல் கிடைக்கவேண்டும். அவர்களுக்கு அன்போடும் பண்போடும் மருந்துகள், உணவுகள் வழங்கப்படவேண்டும். அதைத் தாய்மை உள்ளம் படைத்த செவிலியர்களால்தான் செய்ய முடியும். செவிலியர்கள் அவர்களுக்கு அன்போடு உணவும் மருந்தும் கொடுக்கும்போது அவர்களுக்கு ஆறுதல் ஏற்படுகிறது. அதேமாதிரி ஆண் செவிலியர்களால் செய்ய முடியாது.

Buildings for Government Hospital at Komarapalayam

* 10. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pltased to state—

(*a*) whether the Marichettiar Trust in Komarapalayam have donated buildings for housing the Government Hospital; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த மாரிச்செட்டியார் பொறுப்புக்கழகம் தற்போது குமாரபாளையத்தில் உள்ள அரசினர் மருத்துவ மனைக்கு, மேல்நிலை நீர்த் தொட்டி அடங்கிய 18 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்று, பொது அறை ஒன்று, சுகாதார அறை ஒன்று ஆகியவை அடங்கிய ஒரு மாடிக்கட்டடத்தை நன்கொடையாக வழங்கியிருக்கிறது. அதன் மொத்த மதிப்பீடு 2.50 லட்சம் ரூபாய்.

Sale of Drugs

* 11. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether a number of Drug Stores owners were prosecuted for selling Drugs at inflated prices in Chintadripet in Madras in January 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 1973 ஜனவரி மாதத்தில் சிந்தாதிரிப்பேட்டையைச் சேர்ந்த இரு மருந்து வியாபாரிகள் மீது வழக்கு தொடரப்பட்டது.

(இ) (1) சாந்தி மெடிக்கல் ஸ்டோர்ஸ், சென்னை-2.

(2) மாடர்ன் டிரக் ஸ்டோர்ஸ், சென்னை-2.

THIRU N. DENNIS : Sir, whether the Government would consider the cancellation of licences of such black-marketeers?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மருந்து விற்பனையில் பல்வேறு வகைகளில் தவறுகள் ஏற்படுகின்றன. நிர்ணயித்த விலைக்கு அதிகமாக விற்பனை செய்வது ஒரு தவறு. அதற்கு நீதிமன்றங்கள் மூலமாகத்தான் தண்டனை வழங்குகிற முறை இருக்கிறது. இன்னொரு முறை மருந்தின் தன்மையை பாதிக்கும் அளவில் அதன் தரத்தைக் குறைத்தல், கலப்படம் செய்தல், அதனால் உயிருக்கே சில நேரங்களில் தீங்கு ஏற்படுதல் ஆகும். அப்படிப்பட்டத் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுடைய லைசென்சை நிறுத்திவிடலாம் என்ற முடிவு எடுக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினையில் அவர்கள் அதிக விலைக்கு மருந்தை விற்றார்கள் என்பதற்காக வழக்குத் தொடரப்பட்டு, அது முடிவு பெறக்கூடிய நாளில் அந்த நாள்